RNI-NO: TNTAM/2021/83936




Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 154 ஜூன்.11 2026 வியாழக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி: அமைச்சர் ஆதவ் அர்ஜூனா வழங்கினார்

சென்னை: ஜூன்.11-

சர்வதேச அளவிலான பல்வேறு போட்டிகளில் சாதனைகள் படைத்த விளையாட்டு வீரர்களுக்கு அமைச்சர் ஆதவ் அர்ஜூனா நிதியுதவி வழங்கினார். சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் தமிழக விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் சர்வதேச அளவில் சிறந்து விளங்கும் தமிழக வீரர்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சி நடந்தது.

இதில், பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா கலந்து கொண்டு பாரா பேட்மிண்டன் வீராங்கனை துளசிமதி முருகேசனுக்கு நிதியுதவியாக 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

இம்மாதம் நடைபெறவுள்ள பிரெஞ்சு பாரா பேட்மிண்டன் சர்வதேச போட்டி, பிரிட்டிஷ் மற்றும் ஐரிஷ் பாரா பேட்மிண்டன் சர்வதேச போட்டிகளில் பங்கேற்பதற்கான பயண மற்றும் பயிற்சிச் செலவுகளுக்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித் தொகை திட்டத்தின் கீழ் இந் நிதியுதவி வழங்கப்பட்டது.

மேலும், பாரா துப்பாக்கி சுடுதல் விளையாட்டு வீரர் மனோஜ் குமாருக்கு மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டியில் கலந்து கொண்டு பதக்கம் வெல்ல ஏதுவாக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக் கட்டளை மூலம் ரூ.6,27,795 மதிப்பில் துப்பாக்கி சுடுதல் விளையாட்டு உபகரணத்தையும் வழங்கினார்.




அதேபோல், ஹாங்காங்கில் மே மாதம் நடைபெற்ற ஆசிய யு 20 தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழக வீரர்கள் சாதனை படைத்துள்ளனர்.

இதில் தமிழக அரசின், வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற விளையாட்டு வீரர்களான ஜித்தின அர்ஜூனன் (ஆண்கள் நீளம் தாண்டுதல்), சாதனா ரவி (பெண்கள் மும்முறை தாண்டுதல்) மற்றும் பாவனா (பெண்கள் 4x100 தொடர் ஓட்டம்) ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

அவர்களுக்கு தலா ரூ. 3 லட்சமும், இவர்களுடன் ஆண்கள் 4x400 தொடர் ஓட்டப் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற ரஞ்சித் குமாருக்கு ரூ. 2 லட்சமும் வழங்கினார்.

சீனாவில் நடைபெற உள்ள 2026 ஆசிய கடற்கரை சர்வதேச விளையாட்டு போட்டியில் கலந்து கொள்ளும் சைலிங் விளையாட்டு வீரர் சித்தரேஷ் நடேசன் உயர்தர உபகரணங்கள் வாங்குவதற்கு எலைட் திட்டத்தின் கீழ் ரூ. 4.65 லட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.

இந்நிகழ்வின் போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மாவட்ட வருவாய் அலுவலர் ரெ.சுமன், பொது மேலாளர் எல்.சுஜாதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பழநி பஞ்சாமிர்தம் மீண்டும் சட்டவிரோத விற்பனை: ஆன்லைனில் அதிக விலையால் பக்தர்கள் அதிர்ச்சி

பழநி: ஜூன்.11-

பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயில் பஞ்சாமிர்த பிரசாதத்தை 'அமேசான்' ஆன்லைன் வர்த்தக நிறுவனம் மீண்டும் சட்ட விரோதமாக அதிக விலைக்கு விற்பனை செய்வது பக்தர்களை அதிர்ச்சி அடைய செய்துள்ளது.

பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தேவஸ்தானம் சார்பில் பஞ்சாமிர்தம் பிரசாதமாக வழங்கப்படுகிறது. தமிழகக் கோயில்களில் வழங்கப்படும் பிரசாதங்களில் புவிசார் குறியீடு கிடைத்தது பழநி கோயில் பஞ்சாமிர்தத்துக்கு மட்டுமே.

அத்தகைய சிறப்புமிக்க பஞ்சாமிர்தம் தேவஸ்தானம் சார்பில் அரை கிலோ டப்பா ரூ.40க்கும், டின் ரூ.45க்கும் மற்றும் 200 கிராம் டப்பா ரூ.20க்கும் விற்கப்படுகிறது. இந்து சமய அறநிலையத் துறை, பழநி தேவஸ்தானம் மற்றும் இந்திய அஞ்சல் துறையுடன் இணைந்து அபிஷேக பஞ்சாமிர்தத்தை பக்தர்கள் வீட்டில் இருந்தே பெறும் திட்டமும் நடைமுறையில் உள்ளது.

அதன்படி, https://hrce.tn.gov.in என்ற வலைதளத்திலோ அல்லது அஞ்சல் நிலையத்திலோ பஞ்சாமிர்தக் கட்டணமாக ரூ.145 செலுத்திப் பதிவு செய்தால் தபாலில் வீட்டுக்கு அனுப்பி




வைக்கப்படும்.

தனி நபர்கள் அல்லது தனியார் நிறுவனங்கள், தேவஸ்தான பஞ்சாமிர்தத்தை மொத்தமாகக் கொள்முதல் செய்து, வியாபார நோக்கத்தில் விற்பனை செய்ய எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை.

இருப்பினும் 5 மாதங்களுக்கு முன்பு அமேசான், இண்டியா மார்ட், மீஸோ போன்ற ஆன்லைன் வர்த்தக நிறுவனங்கள் சட்ட விரோதமாக பழநி கோயில் பஞ்சாமிர்தத்தை விற்பனை செய்தது தெரியவந்தது.

இதையடுத்து, பழநி தேவஸ் தானம் சார்பில் சைபர் கிரைம் போலீஸில் ஆதாரத்துடன் புகார் அளிக்கப்பட்டது. மேலும், பொதுமக்களும், பக்தர்களும், தனியார் நிறுவன வலைதளங்கள் வழியாகவோ, தனியார் கடைகள் மூலமாகவோ பழநி கோயில் பஞ்சாமிர்தத்தை கூடுதல் விலை கொடுத்து வாங்கி ஏமாற வேண்டாம் என தேவஸ்தானம் சார்பில் தெரிவிக் கப்பட்டது. தேவஸ்தான புகாரையடுத்து, ஆன்லைன் வர்த்தக நிறுவனங்கள் பஞ்சாமிர்த விற்பனையை நிறுத்தின.

அமேசான் நிறுவன வலைதளப் பக்கத்தில் இடம்பெற்றுள்ள பழநி கோயில் பஞ்சாமிர்தம்.

### மீண்டும் விற்பனை

இந்நிலையில் 5 மாதங்களுக்குப் பிறகு மீண்டும் 'அமேசான்' ஆன்லைன் வர்த்தக நிறுவனம், பழநி முருகன் ஸ்பெஷல் பஞ்சாமிர்தம் என்ற பெயரில் பழநி தேவஸ்தான பஞ்சாமிர்தத்தையே (அரை கிலோ டின் 2) தள்ளுபடி போக ரூ.229க்கு விற்பனை செய்து வருவது பக்தர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வியாபார நோக்கில் பக்தர்களை ஏமாற்றி சுவாமி பிரசாதத்தை சட்ட விரோதமாக அதிக விலைக்கு விற்பனை செய்யும் இதுபோன்ற ஆன்லைன் வர்த்தக நிறுவனங்கள் மீது தேவஸ்தானம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முருக பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இயக்குநர் பாரதிராஜா உடலுக்கு அரசு மரியாதை: அஞ்சலிக்கு பின் முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை: ஜூன்.11-

திரைத்துறையில் பாரதிராஜாவின் பங்களிப்பைப் போற்றி, அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது இறுதிப் பயணத்திற்கு அரசு மரியாதை வழங்கப்படும் என்று முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: "தமிழ்த் திரையுலகின் இயக்குநர் இமயம் பாரதிராஜா காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த மன வேதனையும் துயரமும் அடைந்தேன்.

கிராமியப் பின்னணியில் வாழ்வியல் உயிரோட்டத்துடன் பல வெற்றிப் படங்களை உருவாக்கி, தமிழ்த் திரைப்பட உலகில் தனக்கு என தனி முத்திரை பதித்தவர் இயக்குநர் பாரதிராஜா. தனது படைப்புகளுக்காக நாட்டின் உயரிய விருதான பத்ம ஸ்ரீ உள்ளிட்ட பல்வேறு தேசிய, மாநில விருதுகளைப் பெற்றவர். பல தலைமுறைக் கலைஞர்களை உருவாக்கிய அவரது பங்களிப்பு தமிழ்த் திரைப்பட வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

இயக்குநர் இமயம் பாரதிராஜாவின் மறைவு, தமிழ்த் திரையுலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், திரைப்படத் துறையினருக்கும், ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன். திரைத்துறையில் பாரதிராஜா அவர்களின் பங்களிப்பைப் போற்றி, அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது இறுதிப் பயணத்திற்கு அரசு மரியாதை வழங்கப்படும்." என்று முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.





முன்னதாக, நீலாங்கரை இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த இயக்குநர் பாரதி ராஜாவின் உடலுக்கு முதல்வர் விஜய் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

வயது மூப்பு காரணமாக கடந்த சில மாதங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இயக்குநர் பாரதிராஜா இன்று அதிகாலை காலாமானார்.

## போதைப்பொருள் கடத்தல் நபருக்கும் எனக்கும் தொடர்பு இல்லை: லீமா ரோஸ் சகோதரர் ஜான் பிரிட்டோ காவல் ஆணையரகத்தில் புகார்

சென்னை: ஜூன்.11-

போதைப்பொருள் கடத்தல் நபருக்கும், எனக்கும் தொடர்பு இல்லை. சமூக வலைதளங்களில் வீடியோ பதிவிட்டவர்கள், பரப்பியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிமுக எம்எல்ஏ லீமா ரோஸ் மார்ட்டின் சகோதரர் ஜான் பிரிட்டோ சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்தார்.

இலங்கைக்கு கடல் வழியாக ரூ.250 கோடி மதிப்பிலான போதைப் பொருட்களை கடத்திய தாக கூறப்படும் வழக்கில், கோவையை சேர்ந்த ஜான் பிரிட்டோ (57) என்பவரை அமலாக்கத்துறை அண்மையில் கைது செய்தது.

இந்த ஜான்பிரிட்டோ, அதிமுக எம்எல்ஏ லீமா ரோஸ் சகோதரர் எனவும், இவர்களது குடும்பத்தை சேர்ந்தவர் தான் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா என்றும் சமூக வலைதளங்களில் தகவல் வைரலானது.

இந்நிலையில், தனக்கும் போதைப் பொருள் கடத்தல் வழக்குக்கும், எந்த சம்பந்தமும் இல்லாத நிலையில், தன் பெயரை போதைப்பொருள் கடத்தல் கும்பலுடன் தொடர்புபடுத்தி சமூக வலைதளங்களில் அவதூறு கருத்துக்களை பதிவிட்டு



வருபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று லீமா ரோஸ் சகோதரரான கோயம்புத்தூர், திருவள்ளுவர் நகரை சேர்ந்த ஜான் பிரிட்டோ (59) என்பவர் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் நேற்று புகார் மனு அளித்தார்.

அதில், அவர் கூறியிருந்ததாவது: நான் கோவையில் பிளாஸ்டிக் மறு சுழற்சி வியாபாரம் செய்கிறேன். தற்போது சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள எங்கள் அலுவலகத்தில் வேலை செய்து வருகிறேன்.

எனது சகோதரி லீமா ரோஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது வேண்டுமென்று உள்நோக்கத்தோடு உண்மைக்கு புறம்பாக பல்வேறு அவதூறான குற்றச்சாட்டுக்கள் திட்டமிட்டு, சுய ஆதாயம் அடைவதற்காக யூடியூபில் தொடர்ந்து பரப்பப்பட்டு வருகிறது. யூடியூபில் பதிவேற்றம் செய்யப்பட்ட வீடியோவை நான் கடந்த 8ம் தேதி பார்த்தேன்.

அந்த வீடியோவில் கூறப்படும் ஜான் பிரிட்டோ எனும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட நபருக்கும், எனக்கும் எந்த ஒரு தொடர்பும் கிடையாது. என்னிடம் மத்திய மாநில அரசுகளை சார்ந்த எந்த ஒரு புலனாய்வு நிறுவனமும், எந்த காலத்திலும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக, எந்த ஒரு விசாரணையும் செய்தது கிடையாது.

நான் அவ்வாறான குற்றச் செயல்களில் எந்த ஒரு சூழ்நிலையிலும் ஈடுபட்டதும் கிடையாது. இவ்வாறு இருக்கையில் உண்மைக்கு மாறாக பொய்யாகவும், உள்நோக்கத்தோடும் வீடியோவில் என் மீது புகார் கூறப்பட்டுள்ளன.

இதனால், எனக்கும் மற்றும் என் குடும்பத்தார் நற்பெயருக்கும் மிகப் பெரிய களங்கம் ஏற்பட்டுள்ளது. இதற்கு காரணமானவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## அதிக காலிப்பணியிடங்களை நிரப்ப அறிவுரை : டிஎன்பிஎஸ்சி தலைவர் தகவல்

சென்னை: ஜூன்.11-

அரசு துறைகளில் அதிக காலிப்பணியிடங்களை நிரப்ப அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாகவும், வருடாந்திர தேர்வு அட்டவணையின்படி அனைத்துப் போட்டித் தேர்வுகளும் நடத்தப்படும் என்றும் டிஎன்பிஎஸ்சி தலைவர் எஸ்.கே.பிரபாகர் தெரிவித்தார்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய அரசு பதவியேற்றுள்ள நிலையில், அரசு துறை பணி நியமனங்கள் எந்த வகையில் நடைபெறும் என்ற எதிர்பார்ப்பு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகி வரும் தேர்வர்கள் இடையே எழுந்துள்ளது.

இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சி தலைவர் எஸ்.கே.பிரபாகரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது: அரசுத் துறைகளில் அதிக எண்ணிக்கையிலான காலிப்பணியிடங்களை நிரப்ப மனித வளத்துறை அறிவுரை வழங்கியுள்ளது.

அரசு துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களை விரைந்து நிரப்புவது தொடர்பாக டிஎன்பிஎஸ்சியிடமும் ஆலோசனை நடத்தி இருக்கிறது.

டிஎன்பிஎஸ்சியின் 2026ம் ஆண்டுக்கான வருடாந்திர தேர்வு அட்டவணையின்படி, போட்டித்தேர்வுகளுக்கான அறிவிப்புகள் திட்டமிட்டபடி வெளியிடப்பட்டு தேர்வுகள் நடத்தப்படும்.

அந்த வகையில் முதல் அறிவிப்பாக ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வுக்கு (நேர்முகத்தேர்வு இல்லாத பதவிகள்) கடந்த மே 20ம் தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டு ஆன்லைனில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

புதிய பணியிடங்கள் வரும்பட்சத்தில் பிற்சேர்க்கை அறிவிப்பு வெளியிடப்படும். அதேபோல் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை அதிகரித்தாலும் இதேமுறையில் சேர்த்துக்கொள்ளலாம்.

குரூப்1 தேர்வுக்கான அறிவிப்பு ஜூன் 23ம் தேதி வெளியிடப்படும். என்னென்ன பதவிகள் மற்றும் காலியிடங்கள் தொடர்பான விவரங்கள் அறிவிப்பில் இடம் பெறும். இதேபோல், அனைத்துத் தேர்வுகளுக்கான அறிவிப்புகளும் குறித்த காலத்தில் வெளியிடப்பட்டு தேர்வு முடிவுகளும் விரைவாக வெளியிடப்படும்.

கடந்த ஆண்டு, முதல்முறையாக தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் உதவியாளர் பணியிடங்கள் டிஎன்பிஎஸ்சி மூலம் நிரப்பப்பட்டன.

இந்த ஆண்டு பல்வேறு அரசு பல்கலைக்கழகங்களிடமிருந்து ஆசிரியர் அல்லாத பதவிகளில் உள்ள காலிப்பணியிடங்கள் வந்த வண்ணம் உள்ளன. பதவி நிலைக்கு ஏற்ப அந்த பணியிடங்கள் ஒருங்கிணைந்த குரூப்2 தேர்விலோ அல்லது குரூப்2ஏ தேர்விலோ சேர்க்கப்படும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் விரைவில் 15 ஆயிரம் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் என்ற அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த காலிப்பணியிடங்களும் டிஎன்பிஎஸ்சி வாயிலாக படிப்படியாக நிரப்பப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்துக்கு எதிரான ரூ.28 கோடி லஞ்ச வழக்கு முடித்து வைப்பு

சென்னை: ஜூன்.11-

தனியார் கட்டுமான நிறுவனத்திடம் லஞ்சம் பெற்றதாக, முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்துக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்கை முடித்து வைத்துள்ளதாக நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத் துறை, அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

கடந்த 2011 முதல் 2016 வரையிலான அதிமுக ஆட்சிக்காலத்தில், வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்த வைத்தியலிங்கம், சென்னை பெருங்களத்தூர் ஸ்ரீராம் ப்ராப்பர்ட்டீஸ் அடுக்குமாடி கட்டிடத்துக்கு திட்ட அனுமதி அளிக்க ரூ.28 கோடி லஞ்சம் பெற்றதாக புகார் எழுந்தது.

இதுதொடர்பாக அறப்போர் இயக்கம் சார்பில் 2022ம் ஆண்டு லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் அளிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் தாமதத்துக்குப் பிறகு, இந்த புகாரின் அடிப்படையில், 2024ம் ஆண்டு செப்டம்பரில் லஞ்ச ஒழிப்புத் துறை வழக்கு பதிவு செய்தது.

சென்னை அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த இந்த வழக்கில், வைத்திலிங்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு போதுமான ஆதாரங்கள் இல்லை என்பதால், வழக்கை முடித்து வைத்து லஞ்ச ஒழிப்புத் துறை சார்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி எஸ்.கார்த்திகேயன் முன்பு, ஜூன் 12ம் தேதி விசாரணைக்கு வரவுள்ளது. அன்று லஞ்ச ஒழிப்புத் துறை தாக்கல் செய்துள்ள அறிக்கை மீது நீதிபதி முடிவெடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.



## தேனி மாவட்டம்தென்மேற்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் ஆய்வு

தேனி, ஜூன்.11-

தேனி மாவட்டம், தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் நெடுஞ்சாலைத்துறை சார்பில், தேனி கோட்டப்பொறியாளர் அலுவலக வளாகத்தில் பேரிடர் காலங்களில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் தயார் நிலையில் உள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தென்மேற்கு பருவமழையால் சாலைகளில் மரங்கள் முறிந்து விழுதல், மண்சரிவு, வெள்ளநீர் தேக்கம் உள்ளிட்ட அவசரகால சூழல்களில் உடனடியாக மீட்பு மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள தேவையான பொக்லைன் இயந்திரங்கள், மணல் மூட்டைகள், டிராக்டர்கள், ஜே.சி.பி., மரம் வெட்டும் கருவிகள், ஜெனரேட்டர்கள், எச்சரிக்கை பலகைகள், பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்டவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

மேலும், பருவமழை காலங்களில் முக்கிய சாலைகள் மற்றும் பாலங்களில் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொள்ளவும், போக்குவரத்து பாதிக்கப்படாத வகையில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அவசர காலங்களில் துரிதமாக செயல்படும் வகையில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் எப்போதும் தயார் நிலையில் இருக்கவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இவ்வாய்வில் நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர்.குமணன், உதவி கோட்டப் பொறியாளர்கள் திரு.திருக்கண்ணன்ராமமூர்த்தி உள்ளிட்ட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## இயக்குநர் இமயம் பாரதிராஜா மறைவு : முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி



சென்னை, ஜூன்.11-

தமிழ்த் திரையுலகின் பாதையை மாற்றியமைத்து, புதுப்போக்கினை உருவாக்கிய 'இயக்குநர் இமயம்' திரு. பாரதிராஜா அவர்களின் மறைவு பெரும் வேதனையைத் தருகிறது. தமிழ்த்திரையுலகிற்குப் பேரிழப்பாகிவிட்ட அந்தப் பெருங்கலைஞனின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரைமொழியில் தனிமொழி பேசித் தனிச் சகாப்தத்தையே உருவாக்கியவர் பாரதிராஜா. ஸ்டூடியோக்களுக்குள் அடைபட்டிருந்த கேமராக்கள் பாரதிராஜா அவர்களால் கிராமங்களுக்குள் நுழைந்தன. கிராமத்து மனிதர்களையும் அவர்களது வாழ்க்கையையும் திரைக்குக் கொண்டு வந்து, தமிழ்ச்சினிமாவை யதார்த்தத்திற்கு மிக அருகில் கொண்டு சென்றார்.16 வயதினிலே, கிழக்கே போகும் ரயில், சிகப்பு ரோஜாக்கள், அலைகள் ஓய்வதில்லை, டிக் டிக் டிக், முதல் மரியாதை, கடலோரக் கவிதைகள், வேதம் புதிது, கருத்தம்மா உள்ளிட்ட அவரது படைப்புகளைத் தமிழ்ச்சினிமாவின் வரலாற்றை எழுதும் எவர் ஒருவரும் தவிர்க்க முடியாது. தனது படைப்பாற்றலின் வழியாகப் பிற மொழிகளிலும் படங்களை இயக்கி, அங்கும் தன் முத்திரையைப் பதித்த அவரை இந்தியத் திரை வரலாறு என்றைக்கும் உச்சத்தில் வைத்து நினைவுகூரும்!தலைவர் கலைஞர் மீது மிகுந்த பாசம் கொண்டிருந்தவர். தமிழ் மீதும் தமிழினத்தின் மீதும் பற்றுகொண்டு, தமிழ்நாட்டின் உரிமைகள் தொடர்பான போராட்டங்களில் திரையுலகை ஈடுபடுத்தியதில் பாரதிராஜா அவர்களுக்கு மிகப்பெரிய பங்களிப்பு உண்டு.

'இயக்குநர் இமயம்' பாரதிராஜா 'இசைஞானி' இளையராஜா 'கவிப்பேரரசு' வைரமுத்து ஆகியோரது கூட்டணியில் உருவான பாடல்கள் ஒவ்வொரு நிமிடமும் தமிழ்நாட்டின் ஏதோ ஒரு மூலையில் ஒலித்துக்கொண்டும், ஆயிரக்கணக்கான மக்களை மகிழ்வித்துக்கொண்டும்தான் இருக்கின்றன.அவரது உடல்நலன் குறித்து விசாரிக்கவும், அவரது மகன் மனோஜ் பாரதிராஜாவின் மறைவுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறவும் பாரதிராஜா அவர்களைச் சந்தித்து உரையாடிய தருணங்களைத் தற்போது நினைக்கையில் நெஞ்சம் மேலும் பாரமடைகிறது.

பாரதிராஜா அவர்களின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரையுலகைச் சேர்ந்த கலைஞர்களுக்கும், பாரதிராஜாவின் மாணவர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அல்லிநகரத்தில் பிறந்து, அழியாத படைப்புகளைக் கொடுத்த 'இயக்குநர் இமயம்' பாரதிராஜா அவர்கள், சினிமா ரசிகர்களின் மனங்களில் தமிழ் மக்களின் மனங்களில் என்றும் வாழ்வார்!

திரு. பாரதிராஜா அவர்களுக்கு நேரில் அஞ்சலி செலுத்தியபோது, அவரை அரசு மரியாதையுடன் வழியனுப்பி வைக்க வேண்டும் என்று அவர் உடனிருந்தோர் கோரினர். இயக்குனர் இமயம் பாரதிராஜா அவர்களின் சாதனைகளைப் போற்றும் வகையிலும், அவரைச் சார்ந்தோரின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலும் ஆவன செய்ய வேண்டுமெனத் தமிழ்நாடு அரசினைக் கேட்டுக்கொள்கிறேன் என முன்னாள் முதல்வர் மு க ஸ்டாலின் கூறினார்.

## திருவள்ளூர் ஆட்சியர் அலுவலகத்தில் உயர்கல்வி வழிகாட்டல் கட்டுப்பாட்டு அறை: மாவட்ட ஆட்சியர் திருமதி. ச.கவிதா நேரில் ஆய்வு



திருவள்ளூர், ஜூன்.11-

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் இயங்கி வரும் மாவட்ட உயர்கல்வி வழிகாட்டல் கட்டுப்பாட்டு அறையை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ச.கவிதா அவர்கள் நேரில் பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்தார். திருவள்ளூர் மாவட்டத்தில் 202526 ஆம் கல்வியாண்டில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்கள் அனைவரும் 100 சதவீதம் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை மேற்கொள்வதை உறுதி செய்யும் நோக்கில், இந்த வழிகாட்டல் மையமானது கடந்த ஜூன் 6ஆம் தேதி முதல் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.இந்த ஆய்வுக்குப் பின் பேசிய மாவட்ட ஆட்சியர், கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகள், பொறியியல், மருத்துவம், வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த படிப்புகள், பாலிடெக்னிக் (Polytechnic), ஐடிஐ (ITI), ஹோட்டல் மேலாண்மை மற்றும் கேட்டரிங் படிப்புகள் ஆகிய கல்லூரிகளில் உயர்கல்வி சேர்க்கை பெறுவது குறித்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்கள் இங்கு வழங்கப்படுவதாகக் கூறினார். இது தொடர்பான சந்தேகங்களுக்கு மாணவர்கள் நேரடியாகவோ அல்லது 9025019403, 7358800973 ஆகிய தொலைபேசி எண்களைத் தொடர்பு கொண்டோ பயனடையலாம். இதற்காக, காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை தொடர்பு கொள்ளும் வகையில் இந்த கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் மேற்கொண்ட இந்த ஆய்வின் போது, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொறுப்பு) திரு. கோ.சுப்பராவ், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி. பி.பவித்ரா மற்றும் துறை சார்ந்த பிற அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



## மண்ணிவாக்கத்தில் 1வது வார்டு 10வது தெரு சண்முகா நகரில் குளம் புனரமைப்பு பணிக்கு பூமி பூஜை

மண்ணிவாக்கம், ஜூன்.11-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட மண்ணிவாக்கம் ஊராட்சியில் 1வது வார்டு 10வது தெரு சண்முகா நகர் பகுதியில் அமைந்துள்ள குளம் புனரமைப்புப் பணி பூமி பூஜை தொடங்கு விழா மண்ணிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கெஜலட்சுமி சண்முகம் தொடங்கி வைத்தார் இந்த குளம் பொதுமக்களின் 30ஆண்டு காலம் கோரிக்கையை ஏற்று, இந்த குலம் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளப்பட்டது தொடர்ந்து குலம் மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள திமுக நிர்வாகிகளுக்குச் நல சங்க நிர்வாகிகள் மற்றும் அப்பகுதி மக்கள் சால்வை அணிவித்துத் தனது வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்இந்த நிகழ்ச்சியில் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம்.டி.லோகநாதன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சுமதி லோகநாதன், காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ்.கார்த்திக் வார்டு உறுப்பினர்கள் அமுதா ரங்கநாதன், கே.வி.குமார், உஷாபிரபு, பச்சையம்மாள், அண்ணாதுரை, காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் பொன்னுசாமி, ஊராட்சி செயலாளர் ராமபக்தன் மற்றும் நல சங்க நிர்வாகிகள் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்





## நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்கானிக்கும்

தேனி, ஜூன்.11-

தேனி மாவட்ட காவல்துறையினர்.பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹாப்ரியா உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் இரவு நேரங்களில் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.



## அண்ணாமலை தலைமையில் புதிய அரசியல் இயக்கம் விரைவில் அறிவிப்பு: பாஜகவிலிருந்து விலகிய நிர்வாகி தகவல்

கிருஷ்ணகிரி, ஜூன்.11-

கிருஷ்ணகிரியில் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் பாஜக நிர்வாகி, பாராளுமன்ற உறுப்பினர் நரசிம்மன்,அண்ணாமலை தலைமையில் புதிய அரசியல் இயக்கம் விரைவில் தொடங்கப்பட உள்ளதாக தெரிவித்தார். இடைத்தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு இந்த இயக்கம் அறிவிக்கப் படவுள்ளதாகவும், தமிழகம் இதுவரை கண்டிராத அரசியல் மாற்றத்தை உருவாக்கும் எனவும் கூறினார். நேர்மையான ஆட்சி, ஊழல் ஒழிப்பு, வேலைவாய்ப்பு மற்றும் விவசாய பாதுகாப்பு ஆகியவை இயக்கத்தின் முக்கிய கொள்கைகளாக இருக்கும் என்றார். மேலும், திமுக மற்றும் அதிமுகவுடன் கூட்டணி வாய்ப்பில்லை என்றும், அண்ணாமலை தலைமையில் தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் இலக்குடன் செயல்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

## அரசு பழனி கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு விவசாயிகள் போராட்டம்



பழனி, ஜூன்.11-

பழனி கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆயக்குடி பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆயக்குடி பகுதியில் உள்ள அப்பாவி விவசாயிகள் மீது காவல்துறை பொய் வழக்கு பதிவு செய்ததை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. விவசாய நிலத்தில் வண்டல் மண் எடுத்தது சம்பந்தமாக வருவாய்த்துறையினர் ஆய்வு செய்யாமல் ஏழை விவசாயிகளுக்கு ஒரு கோடி ரூபாய் வரை இழப்பீடு நிர்ணயித்து நோட்டீஸ் அனுப்பியதை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மேலும் நிலத்தை விற்பனை செய்து ஆறு ஆண்டுகள் கழிந்த நிலையில் விவசாயிகளுக்கு இழப்பீடு நிர்ணயம் செய்துள்ளதாகவும், இறந்த விவசாயின் மீது வழக்கு பதிவு செய்வதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். சட்டவிரதமாக மண் எடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில் வருவாய் துறை அதிகாரிகளும், காவல்துறையும் உரிய விசாரணை நடத்தாமல் அப்பாவை விவசாயிகள் மீது வழக்கு பதிவு செய்துள்ளதாக குற்றம் சாட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். மணல் கொள்ளையில் ஈடுபட்ட நபர்களிடம் இதைப் பெற்றுக் கொண்டு அரசு அதிகாரிகள் பட்டிமன்றத்திற்கு தவறான தகவலை வழங்கி ஏமாற்றி உள்ளதாகவும், பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை கைவிட வேண்டும் என வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் கோஷம் எழுப்பினர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, போச்சம்பள்ளி ஊராட்சி, கோணனூர், பழனி ஆண்டவர் நகரில், ரூ.3 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்க கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, துணை ஆட்சியர் (பயிற்சி) சாய்சைதன்யா ஜாதவ், ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் மோகன சுந்தரம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



## நீலகிரி மாவட்ட கட்டுமான பொறியாளர் சங்க ஆண்டு விழா மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் கௌரவிப்பு

கோத்தகிரி, ஜூன்.11-

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் நடைபெற்ற நீலகிரி மாவட்ட கட்டுமான பொறியாளர் சங்க ஆண்டு விழா மற்றும் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் கௌரவிப்பு விழாவில் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு,கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் திராவிட மணி ஆகியோர் கலந்துகொண்டு, குத்து விளக்கேற்றி விழாவினை துவக்கி வைத்தனர். மேலும் மாவட்டத்தில் உள்ள கட்டிடம் நடைமுறை, சட்ட பிரச்சனைகள், நிபந்தனைகள் மற்றும் கட்டிடம் கட்டவுள்ள மாஸ்டர் பிளான் சட்ட விதிமுறைகளை தளர்த்தியும், வீடுகள் கட்ட உள்ள சட்டப் பிரச்சனைகளையும் தீர்வு கண்டு இமாச்சல்,சிக்கிம் போன்ற மாநிலங்கள் உள்ள விதிமுறைகள் போல் நீலகிரி மாவட்டத்திலும் கட்டிட நெறிமுறை விதிகளை வகுக்க வேண்டும் என உரையாற்றினர். இவ்விழாவில் மாவட்ட அவைத்தலைவர் போஜன்,கூடலூர் நகர செயலாளர் இளஞ்செழியன் பாபு, உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் சங்க நிர்வாகிகள் சம்பத், விஜயகாந்த், அசோக்குமார், கிறிஸ்தோபர், தமிழக பாண்டிச்சேரி பொறியாளர் சங்க நிர்வாகி ராகவன், மற்றும் நீலகிரி மாவட்ட கட்டுமான தொழிலாளர் சங்க நிர்வாகிகள், கட்டுமான பொருட்கள் விற்பனையாளர்கள், மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுமான பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

## புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில்கடன் பெற்று, சுயமாக தொழில் துவங்க மாவட்ட ஆட்சித் தலைவர்தகவல்

நீலகிரி, ஜூன்.11-

நீலகிரி மாவட்டத்தில் முதல் தலைமுறை தொழில் முனைவோர்களுக்காக சுய வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (நீட்ஸ்) மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது, 2026 2027 ஆம் நிதியாண்டில் சுய தொழில் துவங்க நீலகிரி மாவட்டத்திற்கு நீட்ஸ் திட்டத்தின் கீழ் ரூ.38.00 இலட்சம் மானிய உதவியுடன் கடன் வழங்க 4 தொழில் திட்டங்களுக்கு பெண்கள்2, சிறுபான்மையினர்1 மற்றும் மாற்றுத்திறனாளிகள் 1 என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பம் சமர்பிக்க பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி, பட்டம், பட்டயம், ஐடிஐ / அங்கீகாரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் தொழில்சார் பயிற்சி முடித்தவர்கள் விண்ணப்பிக்க கல்வித்தகுதியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பிற தகுதிகள் 21வயது பூர்த்தியடைந்து இருக்க வேண்டும். பொதுப்பிரிவினருக்கு அதிகபட்ச வயதாக 45 மற்றும் சிறப்புப்பிரிவினருக்கு அதிகபட்ச வயதாக 55 இருக்க வேண்டும். சிறப்புப் பிரிவில் பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர் தகுதியானவர்கள் தமிழ்நாட்டில் வசிப்பவராக இருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் முதல் ரூ.5.00 கோடி வரை திட்ட மதிப்பீட்டில் சேவை மற்றும் உற்பத்தி தொழில் தொடங்க இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். இதற்கு தமிழக அரசு சார்பில் நிலம், கட்டிடம் மற்றும் இயந்திரம் உள்ளடக்கிய திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு மானியமாக அதிகபட்சமாக ரூ.75.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.மேலும், இத்திட்டத்தின் கீழ் பட்டியலினத்தவர்கள்/ பழங்குடியினர் மற்றும் மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு மூலதன மானியத்தில், 10 சதவிகித மானியம் கூடுதலாக வழங்க மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் கடன் பெற்றவர்களுக்கு 3 சதவிகித பின்முனை வட்டி மானியம் கடன் திரும்ப செலுத்தும் காலம் வரையிலும் கீழ் தொழில் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் துவங்க www.msmeonline.tn.gov.in/needs விண்ணப்பித்து பயன்பெறலாம். மேலும் விவரங்கள் பெறவும், கூடுதல் வழிகாட்டுதலுக்கும், 8925533996, 8925533997,04232443947 ஆகிய எண்களை தொடார்பு கொள்ளலாம். ஆகவே தகுதியும், ஆர்வமும் உள்ள முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத்தில் விண்ணப்பித்து பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

## மழை வேண்டி மாவிளக்கு ஊர்வலம்: பெரிய மாரியம்மன்,முத்தாலம்மன், காளியம்மன் கோயில்களில் சிறப்பு வழிபாடு - ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு



கிருஷ்ணகிரி, ஜூன்.11-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்குட்பட்ட சந்தாபுரம் ஊராட்சி ஜமேதார் மேடு கிராமத்தில், மழை வளம் பெருகவும், மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழவும், நோய் நொடியின்றி நலமுடன் இருக்கவும் வேண்டி சிறப்பு மதவிழா மற்றும் வழிபாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சிக்கு ஊர் கவுண்டர் பெரியண்ணன் தலைமை வகித்தார். இதையொட்டி கிராம பெண்கள் மாவிளக்குகளை ஏந்தியபடி பக்தி பரவசத்துடன் ஊர்வலமாகச் சென்று அம்மனை வழிபட்டனர். பின்னர் ஜமேதார் மேட்டில் உள்ள முத்தாலம்மன் கோயில், காளியம்மன் கோயில் மற்றும் காவேரிப்பட்டினம் சந்தைப்பேட்டை மாரியம்மன் கோயில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

தொடர்ந்து அம்மனுக்கு பொங்கல் வைத்து வழிபாடு நடத்தப்பட்டதுடன், நேர்த்திக்கடனாக கிடா வெட்டியும் பக்தர்கள் தங்களது வேண்டுதல்களை நிறைவேற்றினர். விழாவையொட்டி கோயில் வளாகங்களில் பக்தர்கள் திரளாக கூடி அம்மனை தரிசனம் செய்து வழிபட்டனர்.இந்த நிகழ்வில் சந்தாபுரம், ஜமேதார் மேடு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு அம்மனின் அருளைப் பெற்றனர். விழா பக்தி உணர்வுடனும், கிராம மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையிலும் சிறப்பாக நடைபெற்றது.



## முனீஸ்வரர் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஆலயத்தில் தீமிதி திருவிழா

மாதவரம், ஜூன்.11-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி உள்ள அருள்மிகு முனீஸ்வரர் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஆலயத்தில் 44ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆர்.செல்வராஜ், ஆலய நிர்வாகிகள் சுமோரவி, சுரேஷ், மோகன்ராஜ், கார்த்திக், அர்ஜுன், காளிமுத்து, தன்ராஜ், சாய்இளையராஜா, தினேஷ், நாகராஜ் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி ஹோமம், மஞ்சள்நீர் எடுத்தல், பால்குடம் எடுத்தல், அக்னி கப்பறை எடுத்தல் போன்ற பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் 100க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உட்பட கிராமபொதுமக்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். முடிவில் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது.



■ சிவகங்கை மாவட்டம் இலுப்பைகுடியில் அமைந்துள்ள இந்தோதிபத் எல்லை பாதுகாப்புப் படை (ITBP) பயிற்சி மையத்தில், மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து சிறப்பு கண் பரிசோதனை முகாமை நடத்தினர்.முகாமிற்கு டி.ஐ.ஜி. ஜஸ்டின் ராபர்ட் மற்றும் தலைமை மருத்துவர் ஜுபீர் அலாம் தலைமை வகித்தனர். இதில் ITBP வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து பயனடைந்தனர். முகாமில் கண் நோய்கள் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.




## கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பேரூராட்சியில் புதிய குப்பை அள்ளும் வாகனம் பயன்பாட்டிற்கு விடப்பட்டது

கிருஷ்ணகிரி, ஜூன்.11-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் தேர்வு நிலை பேரூராட்சியில், 15வது நிதி ஆணைய மானியம் 202526 ஆண்டின் முதல் தவணை நிதியின் கீழ் ரூ.8 லட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் வாங்கப்பட்ட புதிய குப்பை அள்ளும் வாகனம் பூஜை செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டது.

பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட திமுக அமைப்பு சாரா தொழிலாளர் அணி துணை தலைவர் செந்தில்குமார் வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பாரி, கவுன்சிலர் சோபன்பாபு, தலைமை எழுத்தர் வெங்கடாசலம், கிளைக் கழக செயலாளர்கள் சமரசம், பாஸ்கர், சிற்றரசன், நியமன உறுப்பினர் பசவராஜ் மற்றும் திமுக நிர்வாகிகள் சபரி, முருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.புதிய வாகனம் மூலம் பேரூராட்சி பகுதிகளில் குப்பைகள் விரைவாக சேகரிக்கப்பட்டு சுகாதாரப் பணிகள் மேலும் மேம்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தேனி மாவட்டம் குழந்தைத் திருமணம் தடுப்பு தொடர்பாக மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா. வைத்திநாதன் தலைமையில் நடைபெற்றது

**திருமண முன்பதிவின்போது மணமக்களின் வயதினை உறுதி செய்யும் பொருட்டு பிறப்புச் சான்றிதழ் அல்லது பள்ளிச்சான்றிதழினை கட்டாய ஆவணமாக பெற்றிட வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தல்**




தேனி, ஜூன்.11-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் குழந்தைத் திருமணம் தடுப்பு தொடர்பாக மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா. வைத்திநாதன் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சினேஹாப்ரியா முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

குழந்தைத் திருமண தடுப்புச் சட்டத்தின்படி, 18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கும், 21 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கும் திருமணம் நடத்துவது சட்டவிரோதமானது. குழந்தைத் திருமணங்கள் சிறுமிகளின் கல்வி, உடல்நலம் மற்றும் எதிர்கால வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதால், இதனைத் தடுப்பதில் அனைத்துத் துறை அலுவலர்களும் தீவிர கவனம் செலுத்த வேண்டும். மேலும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல், பள்ளி இடைநிற்றல் மாணவிகளைக் கண்காணித்தல், கிராம அளவில் கண்காணிப்புக் குழுக்களைச் செயல்படுத்துதல், அங்கன்வாடிப் பணியாளர்கள், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குழந்தைத் திருமணங்களைத் தடுப்பதில் திருமண மண்டப உரிமையாளர்கள், அச்சக உரிமையாளர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். குழந்தைத் திருமணம் நடைபெற இருப்பது குறித்து தகவல் கிடைத்தவுடன் உடனடியாக சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அல்லது காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்து திருமணத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். மேலும், 1098 என்ற கட்டணமில்லா தொலைப்பேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். மேலும், இனிவரும் காலங்களில் திருமண முன்பதிவின்போது மணமக்களின் வயதினை உறுதி செய்யும் பொருட்டு பிறப்புச் சான்றிதழ் அல்லது பள்ளிச்சான்றிதழினை கட்டாய ஆவணமாக பெற்றிட வேண்டும். குறிப்பாக கிராமப்புறங்களில் குழந்தைத் திருமணங்களைத் தடுக்கும் பொருட்டு கிராம நிர்வாக அலுவலர்களால் நடத்தக்கூடிய கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தினை மாதம் ஒருமுறை நடத்தி அக்கிராமத்தில் குழந்தைத் திருமணம் நடைபெறவில்லை என்பதனை உறுதிசெய்து அறிக்கை சமர்ப்பித்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து,பள்ளிகளுக்கு அருகில் 100 மீட்டர் தொலைவிற்குள் புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்வதை தடைசெய்தல் வேண்டும். பள்ளியில் நடைபெறும் காலை வழிபாடு கூட்டத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, போதைப் பொருட்கள் பயன்படுத்துதலை தடுத்தல் வேண்டும். போதையில்லா தமிழ்நாடு என்ற இணைவழி செயலி மூலம் போதைப்பொருள் விற்பனை தொடர்பான புகாரினை பதிவு செய்யலாம் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது). இராமகிருஷ்ணன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர். கலைக்கதிரவன், உதவி ஆணையர்கள். பஞ்சாபகேசன் ஜெயதேவி (இந்துசமய அறநிலையத்துறை ), மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்.மதியழகன், மாவட்ட கல்வி அலுவலர்.சுருளிவேல், மாவட்ட சமூக நல அலுவலர் விஷ்ணுபிரியா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி, மாவட்ட தாய்சேய் நல அலுவலர்.செல்வி, மாவட்ட திறன் பயிற்சி அலுவலர். ஜெயபால், உள்ளிட்ட அனைத்துத்துறை சார்ந்த அலுவலர்கள், துணை காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் தனியார் தொண்டு நிறுவன பிரதிநிதிகள், திருமண மண்டப உரிமையாளர்கள், அச்சக உரிமையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## மானாமதுரை புதிய பேருந்து நிலையம்: ஓட்டுநர்கள், நடத்துனர்கள் ஓய்வறையில் மேற்கூரை விரிசல் - தண்ணீர் கசிவால் அவதி!

மானாமதுரை, ஜூன் .11-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் உள்ள ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கான ஓய்வறை பராமரிப்பின்றி சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. ஓய்வறையின் மேற்கூரை மற்றும் சுவர்களில் ஏற்பட்டுள்ள விரிசல்களால் தண்ணீர் கசிந்து, அறையின் தரைப்பகுதியில் தேங்கி நிற்கிறது. இதனால் நீண்ட தூரப் பயணத்திற்குப் பிறகு ஓய்வெடுக்க வரும் ஓட்டுநர்கள் மற்றும்



நடத்துனர்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.மேலும், மின் வசதிகள் அருகே தண்ணீர் கசிவதால் மின் விபத்து ஏற்படும் அபாயமும் நிலவுவதாக ஊழியர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே, போக்குவரத்துக் கழக அதிகாரிகளும் நகராட்சி நிர்வாகமும் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஓய்வறையை சீரமைக்க வேண்டும் என ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மானாமதுரை இளைஞர் ஆகாஷ் உயிரிழப்பு விவகாரம்: 91 நாட்களாக மதுரை அரசு மருத்துவமனையில் உடல் பாதுகாப்பு

சிவகங்கை, ஜூன்.11-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை காவல்துறையினர் தாக்கியதில் உயிரிழந்ததாக கூறப்படும் மானாமதுரை கிருஷ்ணராஜபுரம் பகுதியைச் சேர்ந்த ஆகாஷ் டெலிசன் (24) என்பவரின் உடல், கடந்த 91 நாட்களுக்கும் மேலாக மதுரை அரசு மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், இந்த விவகாரத்தில் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவரது குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையைச் சேர்ந்த ஆகாஷ், ஒருவரை வெட்டிய வழக்கு தொடர்பாக காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருந்தார். காவல்துறையினர் தாக்கியதில் ஏற்பட்ட காயங்களால் அவர் உயிரிழந்ததாக குடும்பத்தினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஆகாஷ், கடந்த மார்ச் 8ஆம் தேதி உயிரிழந்தார்.

இதனைத் தொடர்ந்து உயர் நீதிமன்ற உத்தரவின்படி அவரது உடலுக்கு பிரேதப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. சம்பவத்தில் தொடர்புடைய காவல்துறையினர் மீது கொலை வழக்குப் பதிவு செய்து, தனிப்படை அமைத்து கைது செய்ய வேண்டும், குடும்பத்தினருக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி உறவினர்கள் பல்வேறு கட்டப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை உடலைப் பெற்றுக்கொள்ள மாட்டோம் என குடும்பத்தினர் தெரிவித்து வரும் நிலையில், ஆகாஷின் உடல் தொடர்ந்து மருத்துவமனை பிணவறையிலேயே பாதுகாக்கப்பட்டு வருகிறது.இதுகுறித்து மருத்துவமனை வட்டாரங்கள் கூறுகையில், பிரேதப் பரிசோதனை அறிக்கை தயாரிக்கப்பட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், நீதிமன்ற உத்தரவு கிடைத்தவுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தனர். நீண்ட நாட்களாக உடல் பாதுகாக்கப்பட்டு வருவதால் பல்வேறு சவால்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர். சம்பவம் நடைபெற்று மூன்று மாதங்கள் கடந்தும் தீர்வு எட்டப்படாத நிலையில், அரசு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து நீதியை உறுதி செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் ஆகாஷின் குடும்பத்தினர் உள்ளனர்.



## வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாள் அரசு விழா: சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

சிவகங்கை,ஜூன்.11-

சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலத்தின் பிறந்த நாளை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நகரம்பட்டியில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தமிழக அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.இந்நிகழ்ச்சியில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டாக்டர் டி.கே. பிரபு பங்கேற்று, மாவட்ட ஆட்சியர் பொற்கொடி தலைமையில் சிலைக்கு மாலை அணிவித்தார். நிகழ்வில் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் ஏ. குழந்தை ராணி, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர். சீனிவாச சேதுபதி, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் டி. இளங்கோவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.வாளுக்கு வேலி அம்பலத்தின் சுதந்திரப் போராட்ட பங்களிப்பு மற்றும் தியாகத்தை நினைவுகூரும் வகையில், அவரது பிறந்த நாள் அரசு விழாவாக தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.மேலும், வீரமங்கை வேலுநாச்சியார், மருது சகோதரர்கள், வீரத்தாய் குயிலி உள்ளிட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களின் நினைவிடங்கள் மற்றும் திருவுருவச் சிலைகள் சிவகங்கை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளதை அவர் குறிப்பிட்டார். நிகழ்ச்சியில் மதுரை வடக்கு சட்டமன்ற உறு ப்பினர் எ. கல்லணை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத், வருவாய் கோட்டாட்சியர் ஜெஃபி கிரேசியா, வட்டாட்சியர் சிவராமன், வாளுக்கு வேலி அம்பலத்தின் வாரிசுதாரர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



## மானாமதுரை துணை மின் நிலையத்தில் நாளை மின்தடை

சிவகங்கை, ஜூன்.11-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் நாளை ஜூன் 11மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் மானாமதுரை, சிப்காட், இராஜகம்பீரம், முத்தனேந்தல், இடைக்காட்டூர், மிளகனூர், கட்டிக்குளம், தெ.புதுக்கோட்டை, முனைவென்றி, குறிச்சி, கச்சாத்தநல்லூர், நல்லாண்டிபுரம், சங்கமங்கலம், அன்னவாசல், கீழப்பசலை ஆகிய பகுதியில் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை மின் வினியோகம் இருக்காது என மின் செயற்பொறியாளர் தேன்மொழி தெரிவித்துள்ளார்





■ சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலத்தின் பிறந்த நாளை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நகரம்பட்டியில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அஇஅதிமுக) சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.நிகழ்வில், முன்னாள் அமைச்சரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், அஇஅதிமுக சிவகங்கை மாவட்ட செயலாளருமான பி.ஆர். செந்தில்நாதன் தலைமையில் வாளுக்கு வேலி அம்பலத்தின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.இதில் அஇஅதிமுக நிர்வாகிகள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கட்சித் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சுதந்திரப் போராட்ட வீரரின் தியாகத்தையும், நாட்டின் விடுதலைக்காக அவர் ஆற்றிய அர்ப்பணிப்புமிக்க பணிகளையும் நினைவுகூர்ந்து மரியாதை செலுத்தினர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், காட்டாகரம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பல்வேறு பதிவேடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, துணை ஆட்சியர் (பயிற்சி) சாய்சைதன்யா ஜாதவ், வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



## ‘இந்துநாச்சியார்’ கணக்குக்கு பின்னால் யார்? -போலீசில் அதிமுக புகார்; அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு!

சிவகங்கை, ஜூன்.11-

சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் குறித்து சமூக வலைதளங்களில் தொடர்ந்து அவதூறு பரப்பி வந்ததாக கூறப்படும் "#இந்துநாச்சியார்" என்ற போலி முகநூல் கணக்கின் பின்னணியில் செயல்பட்டு வரும் நபர் மீது உடனடி கைது நடவடிக்கை எடுக்கக் கோரி, அஇஅதிமுக சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் றிஸி. செந்தில்நாதன் தலைமையில் கழக நிர்வாகிகள், சிவகங்கை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் மனு அளித்தனர்.

புகாரை பெற்றுக் கொண்ட காவல்துறை கண்காணிப்பாளர், சம்பந்தப்பட்ட போலி கணக்கை இயக்கி வரும் நபரை தீவிரமாக கண்டறியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இன்னும் 3 நாட்களுக்குள் அடையாளம் கண்டு சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



## வாளுக்கு வேலி அம்பலத்திற்கு திமுக சார்பில் மரியாதை

சிவகங்கை, ஜூன்.11-

சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலத்தின் பிறந்த நாளை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நகரம்பட்டியில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.நிகழ்வில், முன்னாள் அமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிவகங்கை மாவட்ட செயலாளருமான கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் வாளுக்கு வேலி அம்பலத்தின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.மேலும், முன்னாள் அமைச்சரும், மானாமதுரை முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தமிழரசி ரவிக்குமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சுதந்திரப் போராட்ட வீரரின் தியாகத்தையும், விடுதலைப் போராட்டத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பையும் நினைவுகூர்ந்து மரியாதை செலுத்தினர்.இந்நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிக ள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கட்சித் தொண்டர்கள் பலர் பங்கேற்றனர்.



■ சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலத்தின் பிறந்த நாளை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நகரம்பட்டியில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.இந்த நிகழ்வில், சிவகங்கை மாவட்ட தமிழக வெற்றி கழக தொண்டரணி இணை அமைப்பாளர் கே. செந்தூர்பாண்டியன் தலைமையில் வாளுக்கு வேலி அம்பலத்தின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161